பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 07 ஞாயிற்றுக்கிழமை (21-06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 206

## சேந்தாங்குளம் தாக்குதலற்ற பிரதேசம்:

# இருதரப்பு இணக்கத்தினை அரச படைகள் மீறிவிட்டன!

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 21

"காங்கேசன் துறைமுகம் ஊடாக உணவுப் பொருள்களைக் குடாநாட்டுக்குள் எடுத்து வருவது தொடர்பான இணக்கத்தை ஸ்ரீலங்காப் படைகள் மீறிவிட்டன. எனவே அந்த உடன்பாட்டுக்கு இனி மேலும் நாங்கள் கட்டுப்படப்போவதில்லை."

— இவ்வாறு விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்கு அறிவித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) இது தொடர்பான குறிப்பு ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவருவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காங்கேசன் துறைமுகத்திலிருந்து கீரிமலை — சேந்தாங்குளம் பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான உடன்பாடு ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏற்படுத்தியிருந்தது என்பது தெரிந்ததே.

இந்த உடன்பாட்டின்படி உணவுப் பொருள்களை ஏற்றி வரும் வாகன அணி இப்பகுதியூடாகச் செல்லும் பாதையை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாக்களின் உரிமைகள் இன்று தொண்டாக்களிடம்!

### திருமலை எம். பி. சொல்கிறார்

இந்த நாட்டில் பண்டாக்களுக்கு இருந்த உரிமைகள் இப்போது தொண்டாக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. பண்டாக்களின் உரிமைகள் பலவும் இப்போது தொண்டாக்களுக்கே போய்ச் சேருகின்றன.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட சுதந்திரக் கட்சி எம்.பியான எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்த்தன நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கடந்த வியாழக்கிழமை பேசும்போது அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் ஜனாதிபதி பிரேமதாசா அல்ல, தொண்டமான்தான் என்று பேசப்படுவதாக நான் கேள்விப்பட்டேன்.

திருகோணமலையில் மனித வாழ்க்கை நாசமாக்கப்பட்டுள்ளது. முன்னர் அரசர்களைப் போல வாழ்ந்தவர்கள் இப்போது முகாம்களில் வாழ்கிறார்கள். திருமலையில் 52 அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. ஆனால் சர்வோதயம் மட்டுமே சிங்கள மக்களுக்கு உதவி வருகிறது. செஞ்சிலுவைச் சங்கம் சண்டையிடும் தமிழர் குழுக்களுக்கே உதவியது.

கிழக்கு மாகாணத்தில் பிற்பகல் நான்கு மணிக்குப் பின்னர் பொதுமக்கள் நகரங்களுக்குள்ளோ, கிராமங்களுக்குள்ளோ செல்லமுடியாது — என்று தெரிவித்தார்.

(அ-10)

### அம்பாறை மாவட்டத்தில்

## தமிழர் தங்கும் முகாம்களை மூடிவிட அதிகாரிகள் முயற்சி

### கிராமங்களுக்குச் செல்ல முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 21

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் அனைத்தையும் மூடிவிட அரச அதிகாரிகள் முயற்சித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சொந்த இடங்களில் அவர்களைக் குடியமர்த்துதல் என்னும் பெயரிலேயே இம்முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அங்குள்ள தமிழ்க் கிராமங்கள் இன்னமும் இராணுவத்தினரதும் முஸ்லிம்களினதும் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ளன என்றும்—

இந்நிலையில் முகாம்களில் வாழும் தமிழர்கள் தமது சொந்த இடங்களில் சென்று குடியமர அச்சம் கொண்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

[ஒ-5]

## தடுப்புக் காவல் கைதியை விடுதலை செய்ய உத்தரவு

கொழும்பு, ஜூன் 21

தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் கடந்த 18 மாதங்களுக்கு மேலாக களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தம்பிராஜா தேவராஜா என்பவரை உடனடியாக விடுதலை செய்யும்படி சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேற்படி தேவராஜாவை நீதி மன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு தொடர்பாகவே நீதியரசர் ஆனந்த கி. கிரேரோ இந்த உத்தரவை விடுத்தார்.

தேவராஜாவின் மைத்துனரும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டப முகாமில் அகதியாகத் தங்கியிருப்பவருமான செல்லத்தம்பி புண்ணியமூர்த்தி இந்த ஆள்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ, பொலீஸ் மா அதிபர், களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பிரதிவாதிகள் தரப்பில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## "பிராந்திய ராஜ்ய சபை" தெரிவுக்குழுவின் சிபார்சு?

கொழும்பு, ஜூன் 21

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு வெளியிட்டிருக்கும் உத்தேச யோசனை குறித்து மேலதிக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

தெரிவுக்குழு கடந்த புதனன்று கூடியபோது "பிராந்திய ராஜ்ய சபை" என்ற யோசனை பற்றி ஆராயப்பட்டது. இந்த யோசனையில் கூறப்பட்ட விடயங்கள் அடங்கிய பிரதிகள் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த யோசனையின்படி— வடக்கு மாகாணத்திலிருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் தனித்தனியாக "பிராந்திய ராஜ்ய சபை" என்ற அமைப்பாக இயங்குவர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக வேறாக இருப்பினும் "பிராந்திய ராஜ்ய சபை" என்ற ஒருங்கிணைந்த தனிச் சபையாக இருந்து செயல்படும்.

இரு மாகாணங்களுக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குமுழமுனை விவசாயிகள் வயலுக்குப் போக அச்சம்

### அறுவடை செய்ய முடியாத நிலை

புதுக்குடியிருப்பு, ஜூன் 21

குமுழமுனைப் பகுதி விவசாயிகள் தமது வயல்களுக்கு போக அஞ்சுகின்றனர். படையினர். திடீர் திடீரென வான் தாக்குதல்களில் ஈடுபடுவதாலேயே அவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

அறுவடையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளைக் கூடப் படையினர் அண்மையில் தேடித் தேடி தாக்குதல் நடத்தினர்.

அதனாலேயே விவசாயிகள் தமது வயல்களுக்குச் சென்று அறுவடையில் ஈடுபட முடியாது திகிலடைந்து போய் உள்ளனர்.

இம்முறை நல்ல விளைச்சல் இருந்த போதும் தமது பயிரை அறுவடை செய்ய முடியாததால் விவசாயிகள் பெரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் எதிர் நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-126]

## இலவச பாடப்புத்தகங்கள் வெள்ளத்தினால் நாசம்

கொழும்பு, ஜூன் 21

கொழும்பில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த [illegible] நாசமடைந்துள்ளன.

வக்சோல் வீதி, டீன்ஸ் வீதி, ஒல்கொட் மாவத்தை ஆகிய இடங்களிலுள்ள களஞ்சியங்களில் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் [illegible] நாசமடைந்தன.

[ஒ-10]

## வேட்டுக்கு சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

அச்சுவேலி, பத்தமேனிப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சன்னதி வீதியைச் சேர்ந்த பழனித்துரை தவக்குமார் (13 வயது) என்ற சிறுவன் கையில் காயமடைந்தான்.

இச்சிறுவன் வீட்டுக் கூரையைச் செப்பனிட்டுக்கொண்டிருக்கையில் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-ரி]

## படையினர் சூடு!

யாழ்ப்பாணம், ஜூன் 21

தெல்லிப்பழைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதேசமயம் மண்டைதீவு மற்றும் பூநகரிப் பகுதிகளில் உள்ள படையினரும் நேற்றுக் காலை சிறிது நேரம் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

[ஒ-5]

## காற்றினால் சேதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வழமைக்கு மாறான கடுங் காற்றினால் வான்பயிர்கள் பலவும் நாசமடைந்துள்ளன.

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் சுழல் காற்று வீசி வருகிறது. அதனால் வாழை, தென்னை, மா, பப்பாளி போன்ற பயன் தரு மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. பல இடங்களில் மாங்காய்கள் முற்றாமலே விழுந்து வீணாகியுள்ளன.

இதே வேளை தடிமன், காய்ச்சல் போன்ற வியாதிகளும், சளி சம்பந்தப்பட்ட வியாதிகளும் பரவி வருகின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழி அமுலாக்கல் செயற்படுத்தப்படவில்லை!

### அமைச்சர் செல்லச்சாமி கவலை

கொழும்பு, ஜூன் 21

அமைச்சுகள், திணைக்களங்களில் இருந்து தமிழ் மக்களுக்கு இன்னமும் சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. தமிழ் மொழி அமுலாக்கம் இன்னும் சீராக நடைபெறவில்லை. இதனால் இன்று பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன இதனை போராடியே நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற்ற தமிழ்மொழித் தின விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்—

எத்தனையோ போராட்டங்கள் நடத்தி உயிர், உடைமைகளை இழந்து, இரத்தம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இரண்டாகப் பிரிகிறது செக்கோஸ்லோவாக்கியா!

பிராக், ஜூன் 21

செக்கோஸ்லோவாக்கியா இரு நாடுகளாகப் பிரியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அங்கு 74 ஆண்டுகளாக — கம்யூனிஸப் பிடியின் கீழ் — கூட்டாட்சியினால் ஆளப்பட்டு வந்த செக் மக்களும் ஸ்லோவாக் மக்களும் தனித்தனியாகப் பிரிந்து, தங்களுக்கு எனத் தனி நாடுகளை உருவாக்க முடிவு செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து செக்கோஸ்லோவாக்கிய ஜனநாயகப் பாதைக்குத் திரும்பியது தெரிந்ததே.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அங்கு சுதந்திரத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஸ்லோவாக் மக்கள், தமது பிரதேசம் சமஷ்டியிலிருந்து பிரிந்து சுதந்திரமான தனி நாடாக மாற வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட கட்சிக்கு பெருமளவு வாக்குகளை அளித்தனர்.

செக் மக்களைப் பிரதிநிதித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பெண்களுக்கான புத்தம் புதிய '' லுமாலா '' சைக்கின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச. பொ. சிவதாசன், இல. 23, சென். பீற்றர்ஸ் லேன், யாழ்ப்பாணம், (ஆஸ்பத்திரி வீதியில்-அடைக்கலமாதா கோவிலுக்குச் சமீபமாக) (21473)

Prima - Lohman சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21462)

மூன்று மாதம் நிரம்பிய (வெள்ளை, சிவப்பு) பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. யே. அல்பிரட், இல 25, பாக்றோட், றெக்கிளமேசன், குருநகர். (21463)

ஆறு வாரங்கள் நிரம்பிய வெள்ளைநிற பூச்சி அகற்றிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ''இலக்சுமி வாசா'', இல. 222, தெல்லிப்பழை வீதி, சித்தன் கேணி. (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) [21448]

## அல்சேஷன்

இன விருத்திக்காக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்கள் உண்டு. குறைந்த கட்டணம் தொடர்பு: ஐ கே. நடேசன், இல. 15, மலர்மகள் வீதி, [மகேந்திரன் வீதி] அரியாலை. [21466]

## விற்பனையாகின்றன

A/L வினா-விடை [உயர் கல்விப் பதிப்பகம், கொழும்புத்துறை] C:R கொப்பிகள், 5 ஆம் ஆண்டு கட்டுரைத் தேன்துளி 60, China கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [21467]

91 August டிசேடம் 92 விஞ்ஞான பாடங்களின் விடைகள் விற்பனையில். "A" Level Centre, 1 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-2698]

## புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4772]

## மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற, 31 வயது கூட்டுறவு விற்பனையாளருக்கும், 27 வயது, அரசாங்க உத்தியோகத்தருக்கும், வளாக உத்தியோகத்தருக்கும், B.A விரிவுரையாளருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [21440]

## புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

ஆண்டு 5க்கான மேற்படி மாதிரிப் பரீட்சை, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9-00 மணிக்கு நடைபெறும். எமது நிறுவனத்தில் கல்வி கற்கின்ற, கற்காத மாணவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றலாம். பதிவு செய்யவும். நாவலர் கல்வி கழகம், நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி. (21442)

## மணமகள் தேவை

மானிப்பாய், இந்து, 30 வயது, பூசம் 4 ஆம் பாதம். செவ்வாய்க் குற்றமற்ற, ஜேர்மனியில் 7 வருடங்களாகத் தொழில்புரியும், 5' 3'' உயரமுள்ள மணமகனுக்கு நற்குணமுள்ள 20-27 வயதிற்கிடைப்பட்ட மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். திருமணம் இந்தியாவில் அல்லது சிங்கப்பூரில் ஆவணி 19 இற்கு முன்னர். மணப் பெண்ணிற்கு ஜேர்மன் விசா வழங்கப்படும். தொடர்பு: Shine Aquarium, [சைன் வளர்ப்பு மீன் விற்பனை நிலையம்], ஆஸ்பத்திரி பின் ஒழுங்கை, மானிப்பாய். [21414]

## ஜோதிடம்

யுத்தச் செவ்வாய் ஜூலை 17 முதல் இடபராசியில் 40 நாட்கள் சஞ்சரிப்பதாலும், வியாழனை நோக்குவதாலும் தாக்குதல்கள் பரவலாகி உக்கிரமடையும். (இடபராசியில் செவ்வாய் கடந்த வருடம் 7½ மாதங்கள் சஞ்சாரத்தின் போது வளைகுடா யுத்தம் உலகையே உலுக்கியது குறிப்பிடத்தக்கது.) ஜோதிட நூல்களுக்கு சோபிதா, யாழ்ப்பாணம். நூலாசிரியர்: Prof. சத்தியதாஸன். [20598]

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? தொழில் விருத்தியடையுமா? விவாகம் நடைபெறுமா? எதுவானாலும் உரிய பதில் அளிக்கப்படும். தொடர்பு: நேரம் (தினமும்) காலை 8-00 முதல் நண்பகல் 12-00 வரை, த. சிவானந்தன், பிரபல சோதிடர், இல. 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: ஆனந்தா சோதிட நிலையம், 249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் பிற்பகல் 3-00 - 7-00 வரை. [21410]

## கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவின்றிக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (21471)

## O/L 92 - வினாத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். பரீட்சைப் பகுதி, Bond Institutes, யாழ்ப்பாணம். (4773)

## O/L - கணிதம்

92 பரீட்சையில் Credit பெறுபேறுடைய 15 வருடங்கள் வினாத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள B. Sc; [Cey] ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 83, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [21458]

## பலியான கடற்படை அதிகாரி திஸநாயக்கா

கொழும்பு, ஜூன் 21

பூநகரியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த மூன்று படை அதிகாரிகளில் ஒருவர் கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் கொமடோர் அஞ்சனா டிக்கிரி பண்டா திஸநாயக்கா என்று தெரிவிக்கப்படுகிறது

கடந்த 10ஆம் திகதி நடந்த அச் சம்பவத்தில் உயிரிழந்த ஏனைய இருவரும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். [இ-எ]

## நன்றி மறவோம்

31 - 05 - 1992 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இராணுவ நடவடிக்கைப் பாதிப்பினால் இடம்பெயர்ந்த துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் நலனை முன்னிட்டு உணவுப் பொருள்கள், படுக்கை வசதிகள் மற்றும் உதவிகளை நல்கிய தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக நிலையம், யாழ். மாவட்ட இளைஞர் பேரவை, அன்னை தொழிலகம், மில்க்வைற் தொழிலகம், தைதடி விநாயகராலயம், இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ் இந்து சமயப் பேரவை மற்றும் தனிப்பட்ட நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது துர்க்காபுரம் மகளிர் இல்லம் சார்பில் உளங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறோம்;

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.,
தலைவர்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

[21472]

## திருமண வைபவம்

மணமகன்: திருநிறை செல்வன் **ஸ்ரீஸ்வரலிங்கம்**

மணமகள்: திருநிறை செல்வி **ஜெயந்தி**

காலம்: 21 — 06 — 1992 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுவிற்சர்லாந்து [சுவிஸ்]

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜெயம் - கல்யாணி தம்பதிகள்,
[மணமகளின் பெற்றோர்],
வண்ணாங்கேணி,
பளை.

வேலும்மயிலும் - சின்னப்பிள்ளை தம்பதிகள்,
[மணமகனின் பெற்றோர்],
புகையிரத வீதி,
பளை.

[21475]

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் ஆனி மாதம் 7 ஆம் நாள் (21-06-92) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிமுதல் 10-30 மணிவரையுள்ள சுப முகூர்த்த நல்வேளையில்,

எமது திருநிறை செல்வன் **கிருபாகரன்** அவர்களுக்கும்

எமது திருநிறை செல்வி **ஸ்ரீதேவி** அவர்களுக்கும்

கனடா ஸ்காபுரோ 975 கென்னடி வீதியில் உள்ள மண்டபத்தில் மாங்கல்ய தாரணஞ் செய்ய திருவருள் கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

திருமதி நா. பொன்னுத்துரை,
628/12, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி ம. சபாரத்தினம் [கனடா],
எஸ். கே. யோகநாதன் [மாமன்],
17A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

[21460]

## WANTED TEACHER

St. Patrick's College, Jaffna.

A Full - Time English Teacher for
Yr. 6 — Yr. 11
Apply Immediately.

[சி-2135] - Rector.

உ
காரைநகர் களபூமி
திக்கரை முருகமூர்த்தி கோவில்

## வருடாந்த மகோற்சவம்

திக்கரை முருகமூர்த்தி கோவில்
வருடாந்த உற்சவம்,
கே. கே. எஸ். வீதி,
ஸ்ரீ கதிரேசன் கோவிலில்
23 - 06 - 1992 செவ்வாய்
பகல் விசேட அபிஷேக ஆராதனையுடனும்
1008 சங்காபிஷேகத்துடனும் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து
இரவு விசேட மேளக் கச்சேரிகள்
இடம்பெறும்

★ இணுவில் K. R. புண்ணியமூர்த்தி, சுந்தரமூர்த்தி
★ அளவெட்டி சிதம்பரநாதன்
★ மலேசியா, சிங்கப்பூர் புகழ் — V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
★ அளவையூர் N. K. பத்மநாதன்

★ பிரபல வில்லிசைப்புலவர் ★
கலாவினோதன் சின்னமணி குழுவினரின்
★ வள்ளி திருமணம் ★
என்னும் பொருள் பற்றி வில்லிசையும் நடைபெறும்

அதனைத் தொடர்ந்து எம்பெருமான் முருகனுக்கு திருக்கல்யாணமும், பூந்தண்டிகையில் சுவாமி வீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் இம் மகோற்சவத்தில் பங்குபற்றி, எம் பெருமானின் திருவருட்கடாட்சத்தைப் பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

விழா அமைப்பாளர்:-
காரைநகர் களபூமி பொதுமக்கள்.

[21477]

யாழ்ப்பாணம்
மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1992ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான ஆதனவரியை 30-06-1992 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விவரப்படி வெளியாத்துப் பணம் அறவிடப்படுமெனவும், 3ஆம், 4ஆம் காலாண்டுகளுக்கான வரியை அக்காலாண்டுகளின் முதல் மாதத்துக்குள் 5% வரிக் கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்;

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள் / குடியிருப்புக் காணிகள் | 15% |
| இவையல்லாத காணிகளுக்கு | 20% |

காசோலைகள், காசுக்கட்டளைகளை, அஞ்சல் கட்டளைகளை 'யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்' சார்பில் அஞ்சல் சேவையில் அனுப்பும்போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன் கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விவரங்களையும் தயவு செய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-06-1992.

[சி-2133]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஒரு காதால் கேட்டு மறு காதால்....

நாற்பது ஆண்டு காலமாகத் தீர்க்கப்படாத இனப்பிரச்சினையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்த்து வைத்துவிடும் என்ற தோரணையில், ஜனாதிபதியும், அரசாங்கத்தினரும் அதனை மிகைப்படுத்தி வந்தனர். பொறுப்பு தெரிவுக் குழுவிடமே உண்டு என்றும் காட்டிக் கொண்டனர்.

ஆனால் அது தமிழர் நலனைப் புறக்கணித்துச் சிங்களவர்களுக்குச் சாதகமான ஒரு திட்டத்தையே வகுத்துள்ளது.

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கைப் பிரித்து, இரண்டு நிர்வாக அலகுகளை அமைப்பது. அந்த இரண்டு நிர்வாக அலகுகளின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் கூட்டிணைப்புக் குழு ஒன்றை நிறுவுவது —

— இதுவே தெரிவுக்குழுவின் புதிய திட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பு. அதன் பிரகாரம் மாகாண அலகுகள் கூடிய அதிகாரமுள்ளவையா அல்லது கூட்டிணைப்புக் குழுவுக்கு அதிகளவு அதிகாரம் உண்டா என்பன போன்ற விவரங்கள் இனித்தான் தெரிய வர வேண்டும்.

புதிய திட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பே தமிழர்களின் முதலாவதான அரசியல் தேவையைத் தகர்த்து எறிந்த பின்னர், அதன் மேல் பூச்சு எப்படி இருந்தால் என்ன? அதில் ஏது அக்கறை!

எதிர்பார்த்தது போலவே தமிழர்கள் எல்லோரும் நிராகரிக்கும், ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்காக தெரிவுக்குழு கடந்த பதினொரு மாதங்களை வீணாக்கி இருக்கிறது. அனைத்துக் கட்சி மாநாடு போலவே தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வலுவற்ற, வக்கற்ற ஒன்றாக தெரிவுக் குழுவும் ஆகிவிட்டது.

தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டமும் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளும் இரு வேறு துருவங்களாக உள்ளன. வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையையே தமிழர்கள் நிராகரித்த பிறகு, இப்படி ஒரு புதிய தீர்வைத் தயாரிப்பது என்பது உலகத்தை ஏமாற்றுவதே ஆகும்.

முந்திய காலங்களைப் போல இப்போது தமிழர்களை ஏமாற்ற முடியாது என்பது அரசுக்குத் தெரியும். அதனாலேயே தான் நினைத்ததைத் தமிழர்கள் மீது திணிப்பதற்கு முன்னோடியாக போரைத் தீவிரப்படுத்தி தமிழர்களைக் கொன்று வருகிறது. இராணுவத் தீர்வில் முழு நம்பிக்கை வைத்துச் செயற்படுகிறது.

இழந்து போன தமிழர் அரசை மீட்டு நிலைநாட்டுவதற்கு ஒரு தாயகம் அத்திவாரமானது. அது இல்லாத எந்தத் தீர்வினாலும் தமிழர்கள் சுயாட்சி வசதி பெற முடியாது. எனவே தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டத்தை தமிழர்கள் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். சிங்கள அரசும், அதன் தெரிவுக் குழுவும் தமது திட்டத்தை தாமே உச்சி மோர்ந்து கொண்டிருக்கட்டும்! தமிழர்கள் இதனை ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டுவிடுவார்கள்!

எனவே தமிழர்கள் கடைசி வரை தமது போராட்டத்தை தொடர வேண்டிய தேவை உண்டு. அதற்கான திடசித்தத்தை மேலும் வலுப்படுத்திப் பலமுள்ளதாக்கி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

தமிழர்களின் போராட்டத்தை தொடரவிடுவதால் நட்டம் தமிழர்களுக்கு அல்ல சிங்களவர்களுக்குத் தான். அதனை அவர்கள் உணராவிடின் யார் என்ன செய்ய முடியும்?

---

### இனப்பிரச்சினைத் தீர்வை அரசு இழுத்தடித்தால்

# வெளிநாட்டுச் சக்திகள் தலையிடும் ஆபத்து உண்டு

### தினேஷ் குணவர்த்தனா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 21

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் அரசாங்கம் இன்னும் தாமதம் செய்யுமானால் எமது உள்நாட்டு விவகாரத்தில் வெளிநாட்டுச் சக்திகள் தலையிடுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா ஜா-எலப் பகுதியில் மனித விடுதலை நிலையம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிலைய இயக்குநர் வண. பிதா அந்தோனி சிறில் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

''வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுதந்திரம் மறுக்கப்பட்ட துக்ககரமான நிலைவரத்தில் மக்கள் வாழ்கின்றார்கள். சமாதானம் ஏற்படுவதற்காக முதலில் சட்ட விரோத இராணுவத்திடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

யுத்தப் பகுதிகளில் மக்கள் தங்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்துள்ளனர். சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.''

— இப்படி தினேஷ் குணவர்த்தனா சொன்னார். [இ-எ]

---

### இயக்கத்தின் பெயரைக் கூறி பணம் சேகரிக்க முயற்சி

### கொழும்பில் தமிழ் வாலிபர்கள் கைது

இயக்கம் ஒன்றின் பெயரைக் கூறிக்கொண்டு கொழும்பில உள்ள சில தமிழ் வீடுகளுக்குச் சென்று பணம் வசூலிப்பதில் ஈடுபட்டு வந்த தமிழ் வாலிபர்கள் சிலர் பொலீஸாரிடம் சிக்கி உள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளாராம்.

பணத்துக்காக பொலீஸார் சிலரும் இத்தகைய ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டுள்ளது குறித்து பரந்த அளவில் விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலீஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ளவத்தை 33 ஆம் ஒழுங்கையிலுள்ள வீடு ஒன்றுக்கு கடந்த புதன் இரவு சென்ற யாழ் வாலிபர் ஒருவர் பிரஸ்தாப இயக்கத்தின் பெயரைக் கூறி அந்த வீட்டுக்காரரை மிரட்டி 10 ஆயிரம் ரூபா பணம் பெற்றாராம். [த]

---

### மலையக இளைஞர்களை விடுவிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்களை விடுதலை செய்யுங்கள். அல்லது அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் இருப்பின் நீதிமன்றத்தின் முன் நிறுத்துங்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊவா மாகாணம், இரத்தினபுரி உட்பட மலையகப் பகுதிகளில் அண்மையில் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. இவ்வாறு கைதானவர்களில் 30 பேர் இன்னும் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [த]

---

### பிரேமா - தமிழ்க் கட்சிகள் சந்திப்பு கேலிக்குரியது!

### குமார் பொன்னம்பலம் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 21

ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கும் 8 அரசியல் கட்சிகளுக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பு ஒரு கேலியானதும் விரக்தியானதுமாகும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் அச்சந்திப்பை இவ்வாறு வர்ணித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை —

இது குமார் பொன்னம்பலத்தின் சொந்த அனுபவம் என்ற முடிவுக்கே நாம் வர முடியும் என்று இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த]

---

### வடமராட்சியை இலக்கு வைத்தே அடுத்த ராணுவ நடவடிக்கையாம்

### கொழும்புப் பத்திரிகை கூறுகிறது

கொழும்பு, ஜூன் 21

அடுத்த இராணுவ நடவடிக்கை வடமராட்சியை இலக்கு வைத்து நடத்தப்படலாமாம்.

இராணுவ வட்டாரங்கள் மறைமுகமாக இப்படி தெரிவித்ததாக 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வட பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு [illegible] வாப்பட்டதைத் [illegible] இத்தகவல்களை 'ஐலண்ட்' வெளிட்டது.

அடுத்த சில தினங்களில் தந்திரோபாய நடவடிக்கைகள் வடபகுதியில் இடம்பெறலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் 'ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை காலையுடன் ஊரடங்குச் சட்டம் [illegible] (இ-எ)

---

### வவுனியாவில் 32 பேர் விடுதலை

வவுனியா, ஜூன் 21

வவுனியாவில் படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்ட 32 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாத இறுதியில் வவுனியாவில் நடைபெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் போது பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதன் விளைவாக இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (த)

---

### ஜனாதிபதி தேர்தல் வழக்கு:

## சிறிமாவின் தரப்பில் தொகுப்புரை ஆரம்பம்

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கில் மனுதாரரான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சட்டத்தரணி திரு. எச். எல். டி. சில்வா தமது தொகுப்புரையை கடந்த வியாழனன்று ஆரம்பித்தார்.

முதலாம் எதிர்மனுதாரரான ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் சார்பில் அவரது சட்டத்தரணி திரு கே. என். சொக்ஸி 53 நாட்கள் நடத்திய தமது தொகுப்புரையை கடந்த புதனன்று முடித்துக் கொண்டார்.

இரண்டாம் எதிர்மனுதாரரான தேர்தல் ஆணையாளரின் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஏற்கனவே தொகுப்புரை நடத்தினார் என்பது தெரிந்ததே. (உ)

---

### இன்று உதைபந்தாட்ட இறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். சென், பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இவ்வாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி மோதும்.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 61 கழக அணிகள் பங்குபற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் கண்காட்சி உதைபந்தாட்டத்தில் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அணியும் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட நடுவர்கள் அணியும் மோதும்.

இறுதியாட்டத்தைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். ஏற்கனவே நடைபெற்று முடிந்த வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில், முதல் மூன்று இடங்களையும் பெற்ற — கழக வீராங்கனைகளுக்கான — சான்றிதழ்களும், பதக்கங்களும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படவுள்ளன. (உ)

---

### முதல் அணுகுண்டை வீசிய அமெரிக்கர் மரணமானார்!

வாஷிங்டன், ஜூன் 21

ஜப்பான் மீது அணு குண்டைப் போட்ட அமெரிக்க விமானிகளில் ஒருவரான ஜேக்கப் பெயார் [வயது 71] கடந்த புதனன்று அமெரிக்காவின் பல்டிமோர் நகருக்கு அருகேயுள்ள அவரது வீட்டில் மரணமானார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஜப்பானின் ஹிரோசிமா நகரின் மீது முதலாவது அணுகுண்டு போடப்பட்டது. அதற்கு மூன்று தினங்களின் பின் மற்றொரு அணுகுண்டு நாகசாகி நகர் மீது வீசப்பட்டது

ஆனோலா கே (Inola Gay) என்ற குண்டு வீச்சு விமானமே இந்த இரு தாக்குதல்களையும் நடத்தியது. இந்த விமானத்தின் விமானிகளில் ஒருவரே ஜேக்கப் பெயார்.

(ஒ-10)

---

### கொழும்பில் பெரு வெள்ளம் கடவுளின் செயலாம்!

### நெதர்லாந்து நிபுணர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 21

இம்மாத ஆரம்பத்தில் கடும் மழை காரணமாகக் கொழும்பில் ஏற்பட்ட பெரு வெள்ளம் மனித சக்திக்கு அப்பாற்பட்டது. அதற்காக கொழும்பு நகர பிதாக்களையும் அதிகாரிகளையும் குற்றஞ்சாட்டுவது நியாயமாகாது.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நீர்வள நிபுணர் டாக்டர் நிக்கோ டபிள்யு எம். பீற்றர்ஸ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இது கடவுள் செயலாகும். இதனை எந்த அரசாங்கமும் தவிர்த்திருக்க முடியாது. அது வடிகால்வாய்கள் முறையாகப் பராமரிக்கப்படாமையால் ஏற்பட்ட வெள்ளம் அல்ல எனவே வெள்ளத்துக்கு அரசைப் பிழை கூறுவது தவறு. இப்படி அவர் மேலும் சொன்னார். [த-எ]

### உடுகம்பொல கைது என வதந்தி

கொழும்பு, ஜூன் 21

முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல கைது செய்யப்பட்டார் என்று கொழும்பில் கடந்த வியாழக்கிழமை பலமான வதந்திகள் அடிபட்டன.

### விபத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

நேற்று மாலை 5 மணியளவில் நாவற்குழி சந்தியில் இடம்பெற்ற சைக்கிள்-மோட்டார் சைக்கிள் விபத்தில், சைக்கிளில் சென்ற நவரட்ணம் ரகுநாதன் [15 வயது] பலத்த காயமடைந்தார்.

இவர் சுயநினைவற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி அமுலாக்கல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) சிந்திபே தமிழை அரச கரும மொழியாக்கியுள்ளோம். ஆனால் தமிழ்மொழி அமுலாக்கம் இன்னும் சீராக இடம்பெறவில்லை.

தமிழ்மொழி அமுலாக்கலுக்கென தனியாக ஆணைக்குழு ஒன்று இயங்கி வருகிறது. எனினும் சகல அமைச்சுகள், திணைக்களங்களிலிருந்தும் தமிழ் மக்களுக்கு சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

சேமலாப நிதித் திணைக்களத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு அண்மையில் பத்துக் கடிதங்கள் வந்தன. அத்தனை கடிதங்களையும் ஜனாதிபதிக்கு அனுப்பினேன்.

இதுபோன்ற கடிதங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக, பணம் சம்பந்தப்பட்டவையாக இருப்பினும் அவற்றை சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கோ, திணைக்களங்களுக்கோ திருப்பி அனுப்பிவிடும் தன்மான உணர்வும் துணிவும் ஏற்பட்டால் மட்டுமே இதில் நாம் வெற்றி காணமுடியும்— என்றார். [ஓ-3]

# கராச்சியில் கலவரம்

கராச்சி, ஜூன் 21

பாகிஸ்தானின் மிகப்பெரிய நகரான கராச்சியின் பல பகுதிகளில் நேற்று காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

அங்குள்ள முக்கிய அரசியல் இயக்கமான மஹாஜி பாமியின் பிரிவுகளுக்குள் கலவரம் மூண்டதை அடுத்து அந்த நகருக்கு இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கலவரங்களில் 8 பேர் வரையில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது [ஓ-10]

# வைத்திய இறுதியாண்டு பரீட்சையில் 11 பேர் சித்தி

யாழ்ப்பாணம் ஜூன் 21

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இவ்வருடம் மார்ச் மாதம் நடத்திய வைத்தியப் பட்டதாரி (எம். பி. எஸ்) இறுதி ஆண்டுப் பரீட்சையில் பதினொரு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

கே. லிங்கேஸ்வரன், என். செந்தில்ராஜ், எஸ். உதயகுமாரன், எம் தமிழ்தாசன், செல்வி கே. யசோதை, செல்வி கே. ராஜசுலோசனா, ரி. சிதம்பரகுமார், ரி. துளசிராஜா, கே. சுந்தரலிங்கம், பி. நடேசராஜன், செல்வி ஏ. ஜே. ஸ்ரீபன்

இதேவேளை இவ்வருடம் மே மாதம் நடைபெற்ற வைத்தியப் பட்டதாரி மூன்றாண்டுப் பரீட்சையில் பதின்மூன்று மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். (அ)

## காற்றினால்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] றன. குறிப்பாக இந்தக் காற்றினால் சிறுபிள்ளைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரச, தனியார் வைத்திய சாலைகளில் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் காணப்படுகின்றனர்.

வங்காளவிரிகுடாவில் உண்டான அமுக்கம் காரணமாக மேற்கு இலங்கையில் சூறாவளி வீசும் சாத்தியம் உண்டு என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. (ஆ-162)

## தடுப்புக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) ஆஜரான அரச சட்டத்தரணி விஜித மலலகொட எதிர்ப்பு தெரிவிக்காததை அடுத்து தேவராஜாவை உடனே விடுதலை செய்ய நீதியரசர் உத்தரவிட்டார். (உ)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சுபாங்கி கதிர்காமநாதன் (லிங்கா)

கிளிநொச்சி, திருவையாறை [இல 10, படித்த வாலிபர் திட்டம்] பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சுண்டுக்குளியில் வசித்தவரும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவியுமாகிய செல்வி சுபாங்கி கதிர்காமநாதன் 19-06-92 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கதிர்காமநாதன் – பொன்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், திருமதி சுப்பையா லெட்சுமிப்பிள்ளை (பத்தினி ஆச்சி). திருமதி பொன்னுத்துரை பூமணி அன்புப் பேத்தியும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளாகிய சுமித்திரா, கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருவையாறு தர்மலிங்கம் [காந்தி], கொழும்பு திருமதி ஞானச்சந்திரன், சரோஜினிதேவி, யாழ்ப்பாணம் திருமதி சுந்தரீஸ்வரி, ஆனந்தராசா ஆகியோரின் பெறாமகளும், திருமதி மார்க்கண்டு நாகம்மா, திருமதி செல்வரட்ணம் மகேஸ்வரி. திருமதி பொன்னம்பலம் பகவதி, திருமதி நாகலிங்கம் அன்னம்மா, திருமதி குலசிங்கம் தனலட்சுமி, இராசமனோகரன், சந்திரசேகரன், கிருஷ்ணராசா [லண்டன்] ஆகியோரின் மருமகளுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள், இல 29, சந்தனமாதா கோவில் ஒழுங்கை, சுண்டுக்குளியில் இன்று பி. ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சு. கதிர்காமநாதன்

29, சந்தனமாதா கோவில் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். [21480]

## திருமதி திலகவதி இராசையா

திருமதி திலகவதி இராசையா 19 – 06 - 92 வெள்ளி இரவு காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னப்பு - இராசையாவின் [ஆசிரியர் - விக்ரோறியாக் கல்லூரி] பாரியாரும், திருமதி நாகலக்சுமி - கணேசலிங்கம், திருமதி சிவலக்சுமி - சுப்பிரமணியம் ஆகியோரின் தாயாரும், திரு. கணேசலிங்கம் [கனடா], திரு. சுப்பிரமணியம் [இளைப்பாறிய மேலதிக அரச அதிபர்] ஆகியோரின் மாமியும், பஞ்சலிங்கம், வசந்தி, பாஸ்கரலிங்கம், சேகரலிங்கம், சூரியகுமார், உமா, ஸ்கந்தகுமார் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் ''கைலை'', ஆரியர் மடம், ஆனைக்கோட்டை இல்லத்தில் இன்று 21 - 06 - 92 முற்பகல் 10-00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

''கைலை'',
ஆரியர் மடம்,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
மு. சுப்பிரமணியம்
[மருமகன்]
[4777]

## இளையதம்பி இராசையா

[இளைப்பாறிய சிமேந்துக் கூட்டுத்தாபன ஊழியரும், விஜயா சைக்கிள் வேக்ஸ், காங்கேசன்துறை உரிமையாளரும்]

தெல்லிப்பழை வீமன்காமத்தை பிறப்பிடமாகவும், சுன்னாகம் கந்தரோடையில் வசித்தவருமாகிய இளையதம்பி இராசையா காலமானார். அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், நவநீதராசா (கொழும்பு), செனந்தரராசா (இந்தியா], விஜயராசா (சவுதி], ஸ்ரீஸ்கந்தராசா [லங்கா சிமெந்து லிமிட்டெட்), அசோகராசா (சுவிஸ்), மோகனதாசன் [சுவிஸ்] விநோதினி, மன்மதராசா, நியதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிவதனி [ஆசிரியை, நீர் கொழும்பு] யின் அன்பு மாமனாரும், சுஜீரா [கொழும்பு] வின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21 - 6 - 92 (இன்று நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை றோட்,
சுன்னாகம்.

தகவல்:
இ. ஸ்ரீஸ்கந்தராசா
(மகன்)
[21479]

## இருதரப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) தாக்குதலற்ற பிரதேசமாகக் கருத இணக்கம் காணப்பட்டது

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இந்த ஏற்பாட்டை அரச படைகளும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொண்டதை அடுத்து இப்பாதையூடாக வாகன அணிகள் காங்கேசனுக்குச் சென்று வந்தன என்பதும் தெரிந்ததே.

இந்த உடன்பாடு காரணமாக கீரிமலை — சேந்தாங்குளம் பகுதியில் தாங்கள் அமைத்திருந்த பாதுகாப்பு அரண்களைப் புலிகள் நீக்கியிருந்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால்—

இதனைப் பயன்படுத்தி — உடன்பாட்டை மீறி — பாதுகாப்புப்படையினர் இப்போது கீரிமலை வரை முன்னேறி தமது பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் —

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டை தாங்கள் கௌரவிப்போம் என்று செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு இனி எதிர்பார்க்கக் கூடாது. — என்று விடுதலைப் புலிகள் தமது குறிப்பில் தெரிவித்திருக்கின்றனராம். [உ]

## இரண்டாகப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] துவப்படுத்திய ஆளும் கட்சியும், ஸ்லோவாக் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய எதிர்க் கட்சியும் சமமான ஆசனங்களைப் பெற்றதை அடுத்து. சமஷ்டி அரசு அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

அதனையடுத்து இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து இரு பிரதேசங்களும் இரண்டு நாடுகளாகப் பிரிந்து போக முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிவினைக்கான சட்ட பூர்வ நடவடிக்கைகள் செப்டம்பர் 30 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாடுகள் பிரியும் வரை காபந்து சமஷ்டி அரசு ஒன்று நாட்டின் ஆட்சி நிர்வாகத்தை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-க-10]

## "பிராந்திய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] தனித்தனியான இரு முதலமைச்சர்களும், இரு ஆளுநர்களும் இருப்பர். கொள்கையை "பிரதேச ராஜ்ய சபை" தீர்மானிக்கும் அதனை அமுல்படுத்துவது முதலமைச்சர், ஆளுநர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்படும்.

—இதுவே புதிய யோசனையாகும்.

தெரிவுக்குழு மீண்டும் 29 ஆம் திகதி கூடும்போது இந்த யோசனை தொடர்பான தமது அபிப்பிராயத்தை தமிழ்க் கட்சிகள் தெரிவிக்கும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ]


# YOGI'S
## Cake and Sugar Craft Exhibition

18 - 06 - 92 முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக் கேக் கண்காட்சி 22 - 06 - 92 திங்கட்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

YOGI HOME SCIENCE ACADEMY,
71B, நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [சி/2138]

# பட்டமளிப்பும் பாராட்டும்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில்
மஹோற்சவத்தை முன்னிட்டு
கம்பராமாயண தொடர் விரிவுரை நிகழ்த்திவரும்
கம்பன் கழக அமைப்பாளர்
## திரு. இ. ஜெயராஜ் அவர்களுக்கு
இன்று இரவு 8-00 மணிக்கு
நல்லூர் பிரதேச சபை விசேட ஆணையாளரும்,
பிரதேச செயலாளருமான
உயர்திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள்
பட்டம் வழங்கிக் கௌரவிப்பார்.
அனைவரும் வருக!

தொண்டர்கள் சபை
தேவஸ்தானம்
[சி/2137]

# O/L December - 1992
மாதாந்த பயிற்சிப் பரீட்சை
+
# இலவச கருத்தரங்கு

| பரீட்சை (ஞாயிறு) 21 - 06 - 1992 | கருத்தரங்கு (செவ்வாய்) 23 - 06 - 1992 |
|---|---|
| 12-00 — வர்த்தகம் | 2 15 — ஆங்கிலம் |
| 1-00 — ஆங்கிலம் | 3-00 — தமிழ் |
| 2-00 — கணிதம் | 3-45 — கணிதம் |
| 3-00 — விஞ்ஞானம் | 4-30 — விஞ்ஞானம் |
| 4-00 — தமிழ் | 5-15 — சமூகக்கல்வி |
| 5-00 — சமூகக்கல்வி | |

★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பரீட்சையிலும் கருத்தரங்கிலும் பங்கு பற்றலாம்.

பரீட்சைப் பகுதி:
BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.
[4776]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org